**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை :–திருமதி.வே.உதயசூரியா, எம்,எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**

**2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ம் நாள் திங்கட்கிழமை**
**இடைநிலை மனு எண்.346/2022**
**உள்**
**அசல் வழக்கு எண்.13/2022**

பால்சாமி .... மனுதார்/வாதி

... எதிர் ...

1. சாந்தா
2. செந்தாமரை செல்வி
3. ஆச்சிமுத்து
4. கோபி
5. பப்பி
6. கந்தசாமி செட்டியார்
7. அனஞ்சியா ஜெயந்தி ....எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 01.11.2022 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 07.12.2022 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P.தமிழ்செல்வி, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜாரவிக்குமார், அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**உத்தரவு**

1) இம்மனுவானது நீதிமன்ற ஆணையர்/வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்து வழக்குச் சொத்துக்களும், மனுதாரர்/வாதி மற்றும் அவர்களது உறவினர்கள் வீடுகட்டி குடியிருந்து வரும் புறம்போக்கு இடங்களையும் மற்றும் அரசுக்கு சொந்தமான பஞ்சமி நிலங்களையும் ஸ்தல பார்வையிட்டு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவும் , நத்தம், வட்டாட்சியர், தலைமை நில அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் உதவியுடன் Physical Structure–ன் படி அறிக்கை தாக்கல் செய்ய அனுமதி அளித்து

உத்தரவிட வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 9 ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுவின் சுருக்கம்:–</u>

2) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதியாவார் . மனுவில் 6ம் எதிர்மனுதாரர் 17.07.2022 தேதியிட்ட சின்னக்கருப்பன் மகன் ஆண்டி பெயரில் 14.08.2022 அன்று பத்திரம் வாங்கி மனுதாரரின் குத்தகை உரிமையை பாதிக்கும் வகையில் உற்பத்தி செய்து அதனடிப்படையில் 20.08.2022 அன்று மனுச்சொத்தில் நுழைந்து அடியாட்களுடன் வந்து தேங்காய்களை திருடிச்சென்று விட்டதாகவும் , அது சம்பந்தமாக காவல் துறையில் புகார் கொடுத்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் , எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து முறைகேடான ஆவணங்களை உற்பத்தி செய்து மனுதாரரின் சட்டப்படியான குத்தகை உரிமையை மறுத்து வருவதாகவும், இதுசம்பந்தமாக காவல் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்து அதன் மீது நடவடிக்கை இல்லை என்றும் மனுதாரருக்கு காவல் துறை மீதும், நீதிமன்றத்தின் மீதும் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதாகவும் , அதனால் மனுதாரர் மனுச்சொத்தில் உள்ள அமைப்பை நீதிமன்றத்திற்கு தெளிவாக எடுத்துரைக்க வேண்டி மறுவிடை மற்றும் பதிலுரை ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேலும், மனுச்சொத்தின் அருகில் உள்ள செல்லப்பநாயக்கன்பட்டி கிராம புல எண். 339/1, 319/1, 341/1 ல் உள்ள நிலங்கள் மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வரும் பஞ்சமி நிலங்கள் என்றும் , அதற்கு எதிரிடை அனுபோகத்தின் (adverse possession)அடிப்படையில் பட்டா பெறுவதற்கு வருவாய்துறையில் மனுக்கொடுத்து அது நிலுவையில் இருந்து வருவதாகவும் , மேலும், செல்லப்பநாயக்கன்பட்டி கிராம புறம்போக்கு நில புல எண். 349, 347, 346 ல் உள்ள நிலங்களில் மனுதாரர் வீடுகட்டி சட்ட காலத்திற்கும் மேலாக குடியிருந்து அனுபவித்து வருவதாகவும், அதற்கு மனுதாரர்


V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2022.12.19 15:08:01 +0530

பெயரில் வீட்டுவரி ரசீது , மின்இணைப்பு ஆகியவை வழங்கப்பட்டுள்ளதாகவும் , மனுதாரரின் மனைவியின் சகோதரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் செல்லப்பநாயக்கன்பட்டி கிராம புல எண். 346, 347 பகுதியில் வீடுகட்டி குடியிருந்து அனுபவித்து வருவதாகவும் , மனுச்சொத்துக்களுக்கும், மனுதாரர் வசிக்கும் வீடுகளுக்கும் எவ்வித பிரிவினையோ , தடுப்பு வேலியோ இல்லாமல் மனுதாரர் உழவடை செய்துவர ஏதுவாக ஒன்றோறொன்று இணைந்தே உள்ளது என்றும் , மேற்கண்ட சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் மறைத்துள்ளதாகவும் , அதனால் மனுச்சொத்துக்களின் நிலவியல் அமைப்பை கருத்தில் கொண்டே நீதிமன்றம் முடிவுக்கு வரமுடியும் என்றும் , அதனால் மனுச்சொத்தில் அமைந்துள்ள பைப் லைன்கள் மின்இணைப்பு ஆகியவை மனுதாரரின் தனித்த அனுபவத்தில் இருப்பதையும் இதர சொத்துக்களையும் பார்வையிட்டால் உண்மைநிலை தெரியவரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) எனவே, நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து மனுச்சொத்தும் , மனுதாரர் மற்றும் அவரது உறவினர்கள் வீடுகட்டி குடியிருந்து வரும் புறம்போக்கு இடங்களையும் மற்றும் அரசுக்கு சொந்தமான பஞ்சமி நிலங்களையும் பார்வையிட்டு விரிவான அறிக்கை தாக்கல் செய்யவும் , வட்டாட்சியர், நிலஅளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரின் உதவியுடன் நிலவியல் அமைப்பை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர்களின் எதிருரை சுருக்கம் :</u>**

5) மனுவின் 1,2 பத்திகளில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை ஒப்புக்கொள்வதாகவும், இதர சங்கதிகளைப் பொறுத்து மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர் பொய்யான தகவல்களை சொல்லி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவில் 10 மற்றும் 13 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் மனுச்சொத்துக்களுக்கு சம்பந்தமில்லாத புல எண்களை பொறுத்தது என்றும், மேலும்,



V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2022.12.19 15:08:13 +0530

மனுதாரர் பஞ்சமி நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களை அனுபவித்து வீடுகட்டி குடியிருந்து வருவதாகவும், அதனை பார்வையிட மனுதாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், இம்மனு வழக்குச் சொத்திற்கு சிறிதும் சம்பந்தமில்லாத சொத்துக்களை பார்வையிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மற்றும் அவர்களது உறவினர்கள் வீடுகட்டி குடியிருந்து வரும் புறம்போக்கு மற்றும் அரசுக்கு சொந்தமான பஞ்சமி நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற எதிர்மனுதாரர்கள் நத்தம், வட்டாட்சியரிடம் மனு செய்து அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபேராணை மனு எண். 20840/2016 ல் கடந்த 28.09.2022 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் வழக்குச் சொத்திற்கு சிறிதும் சம்பந்தமில்லாத சொத்துக்களை பார்வையிடவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

6) இம்மனுவில், தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்? மனுதாரர்/வாதி கோரியுள்ளபடி மனுச்சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து உத்தரவிடவேண்டியது அவசியமா? என்பதாகும்.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

8) இம்மனுவின் அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் வழக்குச் சொத்திலிருந்து அவரை சட்டத்திற்கு புறம்பாக பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எவ்வித



V UDAYASURIYA
Digitally signed by V UDAYASURIYA
Date: 2022.12.19 15:08:19 +0530

இடைஞ்சலும் செய்யக்கூடாது என்றும், சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வழக்கின் வழக்குரையில் வழக்குச் சொத்தானது மருதைசெட்டியார் மகன் ஆறுமுகசெட்டியார் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றும், அதை வாதியின் மாமனாரின் தந்தை சின்னச்சாமி அம்பலம், வாதியின் மாமனார் முத்து அம்பலம் ஆகியோர் உழவடைதாரர்களாக சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக உழவடை பாத்தியத்தில் இருந்து வந்ததாகவும், அதன் பின்னர் 02.02.2010 அன்று வாதிக்கு பதிவு செய்யப்படாத உழவடை பாத்திய ஒப்பந்த பத்திரத்தை ஆறுமுகச் செட்டியார் ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாகவும், அதன்படி வழக்குச் சொத்து மனுதாரரின் தனித்த சுவாதீனத்தில் இருப்பதாகவும், ஆறுமுக செட்டியார் இறந்த பின்னர் 1 முதல் 7 பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை தடைசெய்ய முயற்சித்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) மேற்கண்ட அசல் வழக்கின் வழக்குரை மூலம் வழக்குச் சொத்தானது ஆறுமுக செட்டியாரின் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்பது வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதே சமயம், வாதி வழக்குச் சொத்தில் உழவடைதாரராக இருந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை எதிர்மனுதாரர்கள் தடைசெய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மனுவை பொறுத்தவரையில் மனுச் சொத்தை மனுதாரர் அனுபவித்து வருவதாகவும் , மனுச்சொத்தை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலத்திலும் , பஞ்சமி நிலத்திலும் , மனுதாரரும், மனுதாரரின் உறவினர்களும் வீடுகட்டி குடியிருந்து வருவதாகவும் இவை அனைத்தும் ஒரே சேகரமாக இருப்பதாகவும், அதை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிடவேண்டியது அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) ஆனால், மனுதாரரின் மனுவில் என்ன காரணத்திற்காக மேற்கண்ட சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல்


V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2022.12.[illegible] 15:08:25 +0530

செய்யவேண்டும் என்பதற்கு எவ்வித ஏற்கத்தக்க காரணங்களும் மனுதாரரால் முன்வைக்கப்படவில்லை. மேலும், மனுதாரரின் மனுவை நன்கு பரிசீலனை செய்ததில், அவர் இம்மனுவை மனுச்சொத்திலும் , அரசு புறம்போக்கிலும் , பஞ்சமி நிலத்திலும் வீடுகட்டி குடியிருந்து வருகிறார் என்பதை நிரூபிக்க வேண்டியும் , தன் அனுபவத்தினை காண்பிக்க வேண்டியுமே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும், மனுதாரர் பஞ்சமி நிலத்தில் அனுபோக உரிமை அடிப்படையில் பட்டா கேட்டு விண்ணப்பம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார் . இந்நிலையில் அதற்கும் சேர்த்து மனுதாரர் தான் அந்த சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறாரா? இல்லையா? என்பதை மெய்ப்பிக்க வேண்டி இந்நீதிமன்றத்தை பயன்படுத்தி நீதிமன்ற ஆணையர் நியமனம் மூலம் தன் அனுபவத்தை மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார் என்பது தெரியவருகிறது.

11) மேலும், மனுதாரரின் மனுவின் மூலம் அவர் தன் அனுபவத்தை நிரூபிக்க வேண்டியே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது . மனுவில் சொல்லியுள்ள இதர சங்கதிகளை பொறுத்து வழக்கு விசாரணையின் மூலம் மட்டுமே தீர்வு காண இயலும் என்ற நிலையில் மனுதாரருக்கு நீதிமன்றத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்லி தாக்கல் செய்துள்ள இம்மனு வழக்கு விசாரணையை காலம் கடத்தவேண்டியும், தன் அனுபவத்தை மெய்ப்பிக்கவேண்டியும் தாக்கல் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது . மேலும், ஒருவரின் அனுபவத்தை நீதிமன்ற ஆணையர் மூலமாக நிரூபிக்க முடியாது என்று பல்வேறு முன்தீர்ப்புகளில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

**எனவே, முடிவில் இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து <u>உத்தரவிடப்படுகிறது.</u>**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2022.12.19 15:08:33 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**

<u>**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**</u> **:–** இல்லை

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**</u>**:–**

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 02.02.2010 | வாதி பெயரில் எழுதிக் கொண்ட உழவடை பாத்திய ஒப்பந்த பத்திரம், | நகல் |
| ம.சா.ஆ.2 | 12.10.2016 | நத்தம் காவல் நிலைய குற்ற எண் . 441/2016ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை. | நகல் |
| ம.சா.ஆ.3 | –– | வெள்ளையம்மாள் என்பவரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனு. | நகல் |
| ம.சா.ஆ.4 | –– | மனுதாரரால் உழவடைதாரராக பதிவு செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட படிவம் –5 | நகல் |
| ம.சா.ஆ.5 | 18.04.2022 | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை C.R.P.(PD)(MD) No.868/2022 உத்தரவு. | நகல் |
| ம.சா.ஆ.6 | 17.05.2022 | புகார் மனு மற்றும் குற்ற எண் . 171/2022ன் முதல் தகவல் அறிக்கை. | நகல் |
| ம.சா.ஆ.7 | 29.05.2022 | நத்தம் காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட மனு எண். 550/2022 ன் புகார் மனு ரசீது. | நகல் |
| ம.சா.ஆ.8 | 29.05.2022 | மனுதாரர் நத்தம் காவல் நிலையத்திற்கு அனுப்பிய புகார் மனு. | நகல் |
| ம.சா.ஆ.9 | 13.06.2022 | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை C.R.L.O.P.(MD) No.10378/2022 உத்தரவு. | உண்மை நகல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.10 | 08.07.2022 | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை C.R.L.O.P.(MD) No.11499/2022 உத்தரவு. | உண்மை நகல் |
| ம.சா.ஆ.11 | 22.07.2022 | நத்தம் காவல் நிலையத்தில் மனுதாரர் மற்றும் 5 பேருக்கு கு.வி.மு.ச.41–A ன் கீழ் கொடுக்கப்பட்ட அறிவிப்பு. | நகல் |
| ம.சா.ஆ.12 | 17.08.2022 | மனுதாரர் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை. | நகல் |
| ம.சா.ஆ.13 | 12.10.2022 | மனுதாரர் தென்மண்டல காவல்துறை தலைவர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு. | நகல் |
| ம.சா.ஆ.14 | 04.11.2022 | நத்தம் காவல் நிலைய குற்ற எண். 389/2022 ன் முதல் தகவல் அறிக்கை. | நகல் |
| ம.சா.ஆ.15 | 01.11.2022 | மனுதாரர் மற்றும் மூவர் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் நத்தம் காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை. | நகல் |
| ம.சா.ஆ.16 | 14.09.2022 | மனுதாரர் பெயரிலுள்ள தேங்காய் ஏற்றுமதி ரசீது. | அசல் |
| ம.சா.ஆ.17 | -- | புகைப்படங்கள் | அசல் |

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**</u>:

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 21.09.2017 | இந்நீதிமன்றத்தின் அ.வ.எண். 36/2017 இடைநிலை மனு எண்.169/2017–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாணை. | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 12.10.2016 | நத்தம் காவல் நிலைய குற்ற எண். 449/2016 ன் முதல் தகவல் அறிக்கை. | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 15.08.2021 | நத்தம் காவல் நிலைய குற்ற எண். 772/2021 ன் முதல் தகவல் அறிக்கை. | நகல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.4 | 24.05.2022 | நத்தம் காவல் நிலைய குற்ற எண் . 171/2022 ன் முதல் தகவல் அறிக்கை. | இணைய நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 04.11.2022 | நத்தம் காவல் நிலைய குற்ற எண் . 389/2022 ன் முதல் தகவல் அறிக்கை. | இணைய நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 28.09.2022 | சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை W.P. (MD) No.20840/2016 உத்தரவு. | நகல் |

V UDAYASURIYA

Digitally signed by V UDAYASURIYA
Date: 2022.12.19 15:08:41 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**